அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 30/2013

எனது இல :- EST 5/4/1/13(XI) – Vol I
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2013.12.18

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்து அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பு மற்றும் வகுப்பு I இலுள்ள அலுவலர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்**

சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பு மற்றும் வகுப்பு I இலுள்ள அலுவலர்களை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு 2009.10.15 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வண்ணம் உள்ளீர்ப்புச் செய்யும் போது அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பு மற்றும் வகுப்பு I இலுள்ள அலுவலர்களிற்கும் சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பு மற்றும் வகுப்பு I இலுள்ள அலுவலர்களிற்கும் இடையில் உருவாக்கப்பட்ட சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு 2013.07.04 ஆம் திகதியில் நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02) அதற்கிணங்க, 2009.10.15 ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பு மற்றும் வகுப்பு I இலுள்ள அலுவலர்களின் சம்பள மாற்றம் சம்பள முரண்பாட்டினைத் திருத்துவதற்கு மட்டும் பின்வருமாறு கருதுகோள் அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும்.

(i) சம்பள முரண்பாடுகளை நீக்கும் நோக்கத்திற்காக மட்டும், 2009.10.15 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வண்ணம் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பு மற்றும் வகுப்பு I இலுள்ள அலுவலர்கள் 2003.05.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவந்த சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு சொந்தமாக்கப்பட்ட அலுவலர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

(ii) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அமுலுக்குவந்த 2004.01.01 ஆம் திகதியிலிருந்து அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சம்பளத் திட்டத்திற்கு அமைய பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதுமான அலுவலர்களாக மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க சகல சம்பள மாற்றங்களும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

03) மேலே 02) இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பள மாற்ற நோக்கத்திற்காக மட்டும் ஏற்புடையதாக்கப்படல் வேண்டும் என்பதுடன் மற்றய சகல நோக்கங்களிற்காகவும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குள் உள்ளீர்த்த உண்மைத் திகதி ஏற்புடையதாக்கப்படல் வேண்டும்.

04) மேலுள்ளவாறு 02) சம்பளம் திருத்தப்பட்டவுடனே சம்பளத்தின் நிலுவைகளைச் செலுத்தாமல் 2013.07.01 ஆம் திகதியிலிருந்து திருத்தப்பட்ட சம்பளம் செலுத்தப்படல் வேண்டும்.

05) இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு 2013.07.01 ஆம் திகதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அலுவலர்களிற்கு 2013.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வண்ணம் ஓய்வூதியத்தின் நிலுவைகளைச் செலுத்தாமல் திருத்தப்பட்ட ஓய்வூதியம் செலுத்தப்படல் வேண்டும்.

06) இச் சுற்றறிக்கையானது பொதுத்திறைசேரி மற்றும் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு என்பவற்றின் இணக்கத்தின் பேரில் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு